# கிருபையுள்ள வார்த்தை ®

## KIRUBAIYULLA VAARTHAI

லூக்கா (LUKE) 4:22

Vol - 22 | September செப்டம்பர் | 2021

ஆண்டு சந்தா ரூ. 120/- | தனிப் பிரதி ரூ. 10/- | வெளிநாட்டு சந்தா ரூ. 600/-



செப்டம்பர் 27ம் தேதி தனது 60வது அகவையை நிறைவு செய்யும்,
எங்கள் ஆவிக்குரிய ஆசான், தந்தை மற்றும் நமது இதழ் ஆசிரியர்,
போதகர் **பிலேமோன் ராஜா** அவர்களை
வாழ்த்துவதில் அகமகிழ்கின்றோம்.

– ஆசிரியர் குழு

கௌரவ ஆசிரியர் BETTY CHOATE | ஆசிரியர் பிலேமோன் ராஜா

புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தை மீட்டமைக்கும் இதழ்

## இதழின் உள்ளே...


| | |
|---|---|
| ஆசிரியர் உரை | 3 |
| பெண்கள் பகுதி | 8 |
| பிரசங்கிக்கும் பிரசங்கங்கள் | 10 |
| சிறுவர் பகுதி | 12 |



*In memory of J.C. CHOATE*

*Guest Editors :* **Betty Choate, Jerry & Paula Bates**

*Editor :* **PHILEMON RAJAH**

ஆசிரியர் குழு

**V. கிங்ஸ்லிராஜா.** M.Th.,
**R. ஆண்டனி ராஜா.** D.Th.,M.B.A (Bible Studies)
**Dr. V.S. இம்மானுவேல்.** M.Sc., D.D., **C. கியாமிலஸ் கார்த்திக்.** B.Sc.,
**P. பேபி ராஜா** D.Th., **E. ஜோசப் பிரதீப்** B.Th.,

சட்ட ஆலோசகர்கள்

அட்வகேட் B. கருப்பசாமி பாண்டியன் B.A., B.L
அட்வகேட் V. சுப்பிரமணியன் M.A., B.L


## கிருபையுள்ள வார்த்தை TV நிகழ்ச்சிகள்

**நம்பிக்கை T.V. யில்**

**ஞாயிறு மதியம் 3:30 மணி**

**தமிழன் T.V. யில்**

**ஞாயிறு காலை 7:00 மணி**

செய்தியாளர்கள்

போதகர். **பிலேமோன்ராஜா.** M.A., M.Th.,
(Director - J.C. School of Evangelism)

சகோ. **கிங்ஸ்லி ராஜா.** M.Th.,
(இணை ஆசிரியர் – கிருபையுள்ள வார்த்தை)

**OUR ENGLISH TV PROGRAM**

**SALVATION TV**

**Every Sundays 2pm**

**Speakers:**
**Jerry Bates & Kingsly Rajah**




**கிருபையுள்ள வார்த்தை புதிய வெளியீடு**

**கிருபையின் கீதங்கள்**

**விபரங்களுக்கு :**

**92 4421 4421, 92 4431 4431**


**பாடல் புத்தகம்**

421 பக்கங்கள்
514 தமிழ் பாடல்கள்
29 ஆங்கில பாடல்கள்
100 சிறுவர் பாடல்களுடன்

**கிருபையுள்ள வார்த்தை**

கர்த்தரை மகிமைப்படுத்திட நம்மை வழிநடத்தும்
வல்ல மீட்பரின் வார்த்தை

**World Literature Publication**
Post Box No. 15, Arasaradi, Madurai 625 016, India




**Send Postal Expenses only**
**and**
**receive**
**The Voice of Truth**
**International**

# கர்த்தரையே மகிமைப்படுத்துவோம் !

ஆசிரியர் உரை
P.C. பிலேமோன் ராஜா



*அன்பான கிருபையுள்ள வார்த்தை வாசகர்கள் அனைவருக்கும், ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் எனது அன்பின் வாழ்த்துக்கள் மற்றும் ஜெபங்கள் !*

"ஸ்தோத்திர பலியிடுகிறவன் என்னை மகிமைப் படுத்துகிறான்; தன் வழியைச் செவ்வைப்படுத்து கிறவனுக்கு தேவனுடைய இரட்சிப்பை வெளிப் படுத்துவேன்" **(சங்கீதம் 50:23)** என கர்த்தர் சொல்வதை நாம் சங்கீத புத்தகத்தில் வாசிக்கின்றோம். நாம் கர்த்தரை மகிமைப்படுத்தும் படியாக படைக்கப்பட்டவர்கள். ஆகையால், இந்த மாதம் உங்களுடன், கர்த்தரை துதிப்பதை அதாவது கர்த்தரை மகிமைப்படுத்துவதைக் குறித்து நான் எழுத விரும்புகிறேன்.

## வார்த்தைகளினால் மகிமைப்படுத்துவோம் !

**ரோமர் 15:5** "நீங்கள் ஒருமனப்பட்டு நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனை ஒரே வாயினால் மகிமைப்படுத்தும்படிக்கு,"

நாம் நமது வார்த்தைகளினாலே கர்த்தரை மகிமைப் படுத்த முடியும். அதனால் தான் சங்கீதக்காரன் இவ்வாறாக சொன்னார், **சங்கீதம் 34:1** "கர்த்தரை நான் எக்காலத்திலும் ஸ்தோத்திரிப்பேன்; அவர் துதி எப்போதும் என் வாயிலிருக்கும்" மேலும், **சங்கீதம் 71:8ல்** "என் வாய் உமது துதியினாலும், நாள்தோறும் உமது மகத்துவத்தினாலும் நிறைந்திருப்பதாக," என்பதாக வாசிக்கின்றோம்.

நற்செய்தியை அறிவிப்பதினாலும் நாம் கர்த்தரை மகிமைப்படுத்த முடியும். ஆகையால் தான் பைபிள், நற்செய்தி சொல்ல செல்கிறவர்களின் பாதங்களை மிக அழகானவை என்று வர்ணிக்கின்றது. **ரோமர் 10:15** "அனுப்பப்படாவிட்டால் எப்படி ," பிரசங்கிப்பார்கள்? சமாதானத்தைக்கூறி, நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவிக்கிறவர்களுடைய பாதங்கள் எவ்வளவு அழகானவைகள் என்று எழுதியிருக்கிறதே."

இதனை உணர்ந்த சங்கீதக்காரன், "கர்த்தரின் கிருபைகளை என்றென்றைக்கும் பாடுவேன்; உமது உண்மையைத் தலைமுறை தலைமுறையாக என் வாயினால் அறிவிப்பேன்." **(சங் 89:1)** என உற்சாகமாக சொல்கின்றான். நற்செய்தியை நானிலமெங்கும் பரவ செய்ய வேண்டும் என்பது ராஜாதிராஜா நமக்கு கொடுத்த பிரதான உத்தரவு **(மத்தேயு 28:18-20).** நாம் அதை செய்யும் போது, நமது வார்த்தைகளினாலே கர்த்தரை மகிமைப்படுத்த முடியும்.

**எபேசியர் 4:29** "கெட்ட வார்த்தை ஒன்றும் உங்கள் வாயிலிருந்து புறப்பட வேண்டாம்; பக்திவிருத்திக்கு ஏதுவான நல்ல வார்த்தை உண்டானால் அதையே கேட்கிறவர்களுக்குப் பிரயோஜனமுண்டாகும்படி பேசுங்கள்." தீமையானவைகளை, அதாவது பயனற்ற வார்த்தைகளை பேசாதிருக்கும் போதும், பெருமை மற்றும் வீம்பு போன்ற தீமையான பேச்சிற்கும் இடமளிக்காமல் நாவடக்கத்துடன் இருக்கும் போதும், நாம் நமது வார்த்தைகளினாலே கர்த்தரை மகிமைப்படுத்த முடியும்.

நான் தீமையான பேச்சுக்களை பேசும்போது, அந்த வார்த்தைகள் அதனைக் கேட்பவரைவிட, பேசுகின்ற என்னையே அதிகம் பாதிக்கும் என்பதை உணர்ந்த யாரும், வெட்டி பேச்சுகளிற்கு இடமளிக்க மாட்டார்கள். **மத்தேயு 12:36,37** "மனுஷர் பேசும் வீணான வார்த்தைகள் யாவையும் குறித்து நியாயத்தீர்ப்பு நாளிலே கணக்கொப்புவிக்க வேண்டும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏனெனில், உன் வார்த்தைகளினாலே நீதிமான் என்று தீர்க்கப்படுவாய், அல்லது உன் வார்த்தைகளினாலே குற்றவாளி என்று தீர்க்கப்படுவாய் என்றார்." நல்லவைகளை பேச அறிந்திருக்கின்ற நாவினாலே தீயவைகளை பேசிட வேண்டாம் என்றும்; ஒரே ஊற்றிலிருந்து நல்ல நீரும், கெட்ட நீரும் வராது போல, பரிசுத்தமானவைகளை பேசுகின்ற நமது நாவினாலே அசுத்தமானவைகளை பேச வேண்டாம் என்றும்; நமது நாவினை கட்டுப்படுத்தி பழக்கப் படுத்துவோம் என பரிசுத்த ஆவியானவரின் வார்த்தைகள் நம்மை ஊக்கப்படுத்துகின்றன. நாவினை அடக்கும் போது நாம் பூரணராகின்றோம்; அதாவது பூரணத்தினை நோக்கி வளர்கின்றோம் என்பதனை நாம் நினைவில்கொள்வோம். **யாக்கோபு 3:2, 8-12** "நாம் எல்லாரும் அநேக விஷயங்களில் தவறுகிறோம்;

ஒருவன் சொல்தவறாதவனானால் அவன் பூரணபுருஷனும், தன் சரீர முழுவதையும் கடிவாளத்தினாலே அடக்கிக் கொள்ளக் கூடிய வனுமாயிருக்கிறான். நாவை அடக்க ஒரு மனுஷனாலும் கூடாது; அது அடங்காத பொல்லாங்குள்ளதும் சாவுக்கேதுவான விஷம் நிறைந்ததுமாயிருக்கிறது. அதினாலே நாம் பிதாவாகிய தேவனைத் துதிக்கிறோம்; தேவனுடைய சாயலின்படி உண்டாக்கப்பட்ட மனுஷரை அதினாலேயே சபிக்கிறோம். துதித்தலும் சபித்தலும் ஒரே வாயிலிருந்து புறப்படுகிறது. என் சகோதரரே, இப்படியிருக்கலாகாது. ஒரே ஊற்றுக்கண்ணிலிருந்து தித்திப்பும் கசப்புமான தண்ணீர் சுரக்குமா? என் சகோதரரே, அத்திமரம் ஒலிவப்பழங்களையும், திராட்சச் செடி அத்திப்பழங்களையும் கொடுக்குமா? அப்படியே உவர்ப்பான நீரூற்றுத் தித்திப்பான ஜலத்தைக் கொடுக்கமாட்டாது."

நாவினை அடக்காதவர்களின் தேவ பக்தியை பைபிள் வீணென்று சொல்கின்றது என்பதனை மறந்துவிட வேண்டாம். **யாக்கோபு 1:26** "உங்களில் ஒருவன் தன் நாவை அடக்காமல், தன் இருதயத்தை வஞ்சித்து, தன்னைத் தேவபக்தியுள்ளவனென்று எண்ணினால், அவனுடைய தேவபக்தி வீணாயிருக்கும்." ஆகையினால் நாம். நமது வார்த்தைகள் கர்த்தரை மகிமைப்படுத்தும்படி இருக்க கவனமாயிருப்போம்.




## செயல்களினால் மகிமைப்படுத்துவோம்!

**கொலே 3:17** "வார்த்தையினாலாவது கிரியையினாலாவது, நீங்கள் எதைச் செய்தாலும், அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து, அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரியுங்கள்."

நாம் நமது நற்கிரியைகளினாலே கர்த்தரை மகிமைப்படுத்திட முடியும். பிள்ளைகள் செய்கின்ற துர்செயல்கள் சமுதாயத்திலே பெற்றாருக்கு அவமானத்தினையும், நற்செயல்கள் மதிப்பையும் கொடுப்பது போல, நாம் செய்கின்ற துர்காரியங்கள் நமது பரமபிதாவை வேதனையையும், நற்செயல்கள் மகிழ்ச்சியையும் மகிமையையும் கொடுப்பதாக இருக்கின்றது. ஆகையால் தான் ஆண்டவர் இயேசு இதனை மிகவும் அழுத்தமாக, நற்செயல்களின் அவசியத்தினை நாம் உணரும்படி மிகவும் வீரியத்துடன் சொன்னார். **மத்தேயு 5:16** "இவ்விதமாய், மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது."

நாம் நற்செயல்களை செய்யும்படியாகவே பிறந்திருக்கிறோம் மற்றும் கிறிஸ்துவிற்குள் மீட்கப்பட்டிருக்கின்றோம். **எபேசியர் 2:10** "ஏனெனில், நற்கிரியைகளைச்செ ய்கிறதற்கு ந ம்கி றிஸ்துஇ யேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்; அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம்பண்ணியிருக்கிறார்."

நம் அனைவருக்கும் நன்மை செய்கின்ற பழக்கம் இயல்பாகவே இருக்கின்றது. அது நமது பரம பிதாவிடமிருந்து வந்தது. அதனால் நன்மை செய்கின்றோம், நாளடைவில் நன்மை செய்கின்ற அளவை குறைத்துவிடுகிறோம். இன்னும் சிலர் நன்மை செய்வதை நிறுத்தி கூட விடுகின்றோம். காரணம்இ நம்மிடம் நன்மை பெற்ற யாரும் நம்மிடம் உண்மையாக, நன்றியாக இல்லை என்பதினால்; மேலும் அதையும் தாண்டி அவர்கள் நமக்கு இழைத்த துரோகம் அல்லது தீங்கு இதற்கு காரணமாக இருக்கலாம். நமது பரமபிதாவைப் பற்றி நமது ஆண்டவர் சொன்னதை சிந்தித்துப் பார்ப்போம். அவர் நன்றிகெட்டவர்களுக்கும், துரோகிகளுக்கும் நன்மை செய்கின்றார் என்பதனை

மறந்துவிட வேண்டாம். **லூக்கா 6:35** “உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள், நன்மை செய்யுங்கள், கைம்மாறு கருதாமல் கடன் கொடுங்கள்; அப்பொழுது உங்கள் பலன் மிகுதியாயிருக்கும், உன்னதமானவருக்கு நீங்கள் பிள்ளைகளாயிருப்பீர்கள்; அவர் நன்றியறியாதவர்களுக்கும் துரோகிகளுக்கும் நன்மை செய்கிறாரே.”

இதையும் தாண்டி, நாம் நன்மை செய்யாதபடி, நம்மை சோர்வு ஆட்கொள்ளலாம். என்ன நன்மை செய்து என்ன பிரயோஜனம் என சலிப்பு நமக்கு வரலாம். அப்படி வரும் என அறிந்த ஆண்டவர், சோர்ந்துப் போகாமல் நன்மை செய்யுங்கள் என வேத வசனங்களின் மூலம் நமக்கு சொல்வதை நினைத்துப் பார்ப்போம். நாம் செய்கின்ற ஒவ்வொன்றிற்கும் நிச்சயமாக பலனுண்டு, ஆகையால் சோர்ந்துப் போகாதிருந்து நன்மை செய்துக்கொண்டே இருப்போம். **ரோமர் 2:6–11** “தேவன் அவனவனுடைய கிரியைகளுக்குத் தக்கதாய் அவனவனுக்குப் பலனளிப்பார். சோர்ந்து போகாமல் நற்கிரியைகளைச் செய்து, மகிமையையும் கனத்தையும் அழியாமையையும் தேடுகிறவர்களுக்கு நித்திய ஜீவனை அளிப்பார். சண்டைக்காரராயிருந்து, சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமல், அநியாயத்திற்குக் கீழ்ப்படிந்திருக்கிறவர்களுக்கோ உக்கிர கோபாக்கினை வரும். முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் பொல்லாங்கு செய்கிற எந்த மனுஷ ஆத்துமாவுக்கும் உபத்திரவமும் வியாகுலமும் உண்டாகும். முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் எவன் நன்மை செய்கிறானோ அவனுக்கு மகிமையும் கனமும் சமாதானமும் உண்டாகும். தேவனிடத்தில் பட்சபாதமில்லை.”

அடுத்த கேள்வி, **யாருக்கு நன்மை செய்வது?** இக்கேள்விக்கான பொதுவான வேதாகம பதில், ‘எல்லாருக்கும்’ தான். எல்லாருக்குமா, ஆம் எல்லாருக்கும் தான். நமக்கு நன்மை செய்தவர்கள், வேண்டியவர்கள் மட்டுமின்றி; வேண்டாதவர்கள், நம்மை எதிரியாக நினைப்பவர்கள் இன்னும் ஒருபடி மேலே சென்று நாம் அழிய வேண்டும் என நினைப்பவர்கள் மற்றும் செயல்படுபவர்கள் என அனைவருக்கும் நாம் நன்மை செய்ய வேண்டும். அது நம்மை பரம பிதாவினைப் போல சற்குணராக மாற்றும்.

**மத்தேயு 5:44–48** “நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைச் சபிக்கிறவர்களைச் ஆசீர்வதியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை




செய்யுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள். இப்படிச் செய்வதினால் நீங்கள் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவுக்குப் புத்திரராயிருப்பீர்கள்; அவர் தீயோர் மேலும் நல்லோர் மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர்கள் மேலும் அநீதியுள்ளவர்கள் மேலும் மழையைப் பெய்யப் பண்ணுகிறார். உங்களைச் சிநேகிக்கிறவர்களையே நீங்கள் சிநேகிப்பீர்களானால், உங்களுக்குப் பலன் என்ன? ஆயக்காரரும் அப்படியே செய்கிறார்கள் அல்லவா? உங்கள் சகோதரரைமாத்திரம் வாழ்த்துவீர்களானால், நீங்கள் விசேஷித்துச் செய்கிறது என்ன? ஆயக்காரரும் அப்படிச் செய்கிறார்கள் அல்லவா? ஆகையால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறதுபோல, நீங்களும் பூரண சற்குணராயிருக்கக்கடவீர்கள்.”

இதைத்தான் பரிசுத்த ஆவியானவர், அப்படி, ‘நன்மை செய்வது தீமையை வெல்லும் எனவும்’ நாம் நன்மையினை செய்து தீமையையும், தீமையானவர்களையும் வெல்ல வேண்டும் எனவும், அழுத்தமாக வலியுறுத்துகின்றார். **ரோமர் 12:17–21** “ஒருவனுக்கும் தீமைக்குத் தீமை செய்யாதிருங்கள்; எல்லா மனுஷருக்கு முன்பாவும் யோக்கியமானவைகளைச் செய்ய நாடுங்கள். கூடுமானால் உங்களாலான மட்டும் எல்லா மனுஷரோடும் சமாதானமாயிருங்கள். பிரியமானவர்களே, பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதிற்செய்வேன், என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதியிருக்கிறபடியால், நீங்கள் பழிவாங்காமல்,

கோபாக்கினைக்கு இடங்கொடுங்கள். அன்றியும், உன் சத்துரு பசியாயிருந்தால் அவனுக்குப் போஜனங்கொடு, அவன் தாகமாயிருந்தால், அவனுக்குப் பானங்கொடு; நீ இப்படிச் செய்வதினால் அக்கினித்தழலை அவன் தலையின்மேல் குவிப்பாய். நீ தீமையினாலே வெல்லப்படாமல், தீமையை நன்மையினாலே வெல்லு.”

ஆகையால் நன்மை செய்வோம், நன்மை செய்வோம்! சோராது மற்றும் ஓயாது நன்மை செய்வோம்! **கலா 6:9** “நன்மைசெய்கிறதில் சோர்ந்து போகாமல் இருப்போமாக; நாம் தளர்ந்து போகாதிருந்தால் ஏற்றகாலத்தில் அறுப்போம்.” அப்படிபட்ட நற்கனிகளினாலே நமது பரம தகப்பனை மகிமைப்படுத்துவோம். **யோவான் 15:8** “நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதினால் என் பிதா மகிமைப்படுவார், எனக்கும் சீஷராயிருப்பீர்கள்.”

## சிந்தனைகளினால் மகிமைப்படுத்துவோம்!

**பிலிப்பியர் 4:8** “கடைசியாக, சகோதரரே, உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, கற்புள்ளவைகளெவைகளோ, அன்புள்ளவைகளெவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகளெவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துக் கொண்டிருங்கள்.”

நாம் நமது சிந்தனைகளினாலே பரமபிதாவை மகிமைப்படுத்துவோம். எதை சிந்திக்க வேண்டும், எதை சிந்திக்க கூடாது என்றும் பைபிள் தெளிவாக போதிக்கின்றது. ஏனெனில் நமது சிந்தனைகளும், எண்ணங்களும் மற்றும் நோக்கங்களும் நியாயந்தீர்ப்பிற்கு உட்பட்டவையாக இருக்கின்றது. **பிரசங்கி 3:17** “சகல எண்ணங்களையும் சகல செய்கைகளையும் நியாயந்தீர்க்குங்காலம் இனி இருக்கிறபடியால், சன்மார்க்கனையும் துன்மார்க்கனையும் தேவன் நியாயந்தீர்ப்பார் என்று என் உள்ளத்தில் எண்ணினேன்.”

தீய சிந்தனைகளை பைபிள் பாவமென்கின்றது. **நீதிமொழிகள் 24:9** “தீயநோக்கம் பாவமாம்; பரியாசக்காரன் மனுஷருக்கு அருவருப்பானவன்.” மேலும் அவைகள் நம்மை தடுமாற வைக்கும் மற்றும் தடம் மாறவும் செய்யும். **நீதிமொழிகள் 14:22** “தீமையை யோசிக்கிறவர்கள் தவறுகிறார்களல்லவோ? நன்மையை யோசிக்கிறவர்களுக்கோ கிருபையும் சத்தியமுமுண்டு.”

சிந்தனைகள் ஏன் முக்கியம்? ஏனெனில், அவைகளே செயல்களாகவும், வார்த்தைகளாகவும் மற்றும் நோக்கங்களாகவும் உருவாகின்றபடியினால், அவைகள் மிகவும் முக்கியம் வாய்ந்தவையாக இருக்கின்றன. அதனால் தான் நமது ஆண்டவர் இயேசு, செயல்களிலும் வார்த்தைகளிலும் மாற்றம் வர, சிந்தனைகளை சீராக்கினார். ஒரு பெண் ஒரு ஆணையோ, ஒரு ஆண் ஒரு பெண்ணையோ தகாத உறவினால் அல்ல, மாறாக தகாத சிந்தனைகளோடு பார்ப்பதையே விபச்சாரம் என்று மாற்று சட்டம் இயற்றி மனிதன் தன் சிந்தனையை (எண்ணத்தினை) பரிசுத்தமாக்கிட வழி செய்தார். தூய்மையான சிந்தனை தூய்மையான செயல்களை நமக்குள் கொண்டு வரும். **மத்தேயு 5:27-28** “விபசாரஞ் செய்யாதிருப்பாயாக என்பது பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப் பட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபசாரஞ் செய்தாயிற்று.”

மேலும், இருதயத்திற்குள் கோபம், வெறுப்பு, அசுத்தம், பொறாமை, பெருமை மற்றும் பிற எண்ணங்கள் வராதபடி அவைகளை சீராக்கிட, ஒரு நீண்ட நெடிய சொற்பொழிவை மலையின் மேல் செய்து, பரிசுத்த வாழ்விற்கான புதிய வாழ்வியல் சட்டங்களை கொண்டுவந்தார். **(மத்தேயு 5,6,7 அதிகாரங்கள்).**

ஆகையால் தான் அப்போஸ்தலாகிய பவுல், அப்படிபட்ட எண்ணங்கள் மேலோங்கி தன்னை மேற்கொள்ளாதபடி, அவைகளை சிறைச் செய்கிறோம். அதாவது அடக்கி அணைபோட்டு தடுத்துவிடுகிறோம் என்கின்றார். **2 கொரிந்தியர் 10:5** “அவைகளால் நாங்கள் தர்க்கங்களையும், தேவனை அறிகிற அறிவுக்கு



விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமையையும் நிர்மூலமாக்கி, எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிறவர்களாயிருக்கிறோம்."

சரியான எண்ணங்கள் கர்த்தருடைய துணையை, உதவியை நமக்கு பெற்றுத்தரும். நமது சீரான எண்ணங்கள் நம்மைவிட்டு விலகாமல் மற்றும் கைவிடாமலிருக்க உதவிபுரிகின்றன. **எபிரேயர் 13:5** "நீங்கள் பண ஆசையில்லாதவர்களாய் நடந்து, உங்களுக்கு இருக்கிறவைகள் போதுமென்று எண்ணுங்கள்; நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை என்று அவர் சொல்லியிருக்கிறாரே."

வார்த்தை மற்றும் செயல்களின் பிறப்பிடமாக சிந்தனைகள் மற்றும் எண்ணங்கள் இருக்கின்றது. இருதயம் அல்லது மனம் என்பது சிந்தனைகளின் பிறப்பிடமாக உள்ளது. ஆகையால் தான் சாலமோன் ஞானி, 'எல்லாக்காவலோடும் உன் இருதயத்தினை காத்துக்கொள்' என்கின்றார். **நீதிமொழிகள் 4:23** "எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள், அதவிடத்தினின்று ஜீவஊற்று புறப்படும்."

மேலும், பரிசுத்த ஆவியானவர் நமது சிந்தனைகள் நமக்கு வாழ்வையோ அல்லது மரணத்தினையோ கொடுக்க வழிவகுக்கும் என்று எச்சரித்தார். **ரோமர் 8:6** "மாம்சசிந்தை மரணம்; ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதானமும்."

ஆகையால் நமது சிந்தையை கிறிஸ்துவின் சிந்தை போலாக்குவோம். கிறிஸ்து பார்ப்பது போல, எந்த ஒரு காரியத்தினையும் கண்ணோக்குவோம். அது நமக்கு தாழ்மையும், கீழ்படிதலையும் உண்டாக்கி, பிதாவிற்கு மகிமையையும் நமக்கு உயர்வையும் உண்டாக்கும் **(பிலி 2:5–11).** ஆகையால் அப்படிப்பட்ட சிந்தையை நாம் ஆயுதமாக தரித்துக்கொள்ள வேத வசனங்கள் வலியுறுத்துகின்றன. **1 பேதுரு 4:1** "இப்படியிருக்க, கிறிஸ்து நமக்காக மாம்சத்திலே பாடுபட்டபடியால், நீங்களும் அப்படிப்பட்ட சிந்தையை ஆயுதமாகத் தரித்துக்கொள்ளுங்கள்."

கர்த்தரை பற்றிய போதிய அறிவின்மையும், வேத வசனங்களின் சத்தியத்தினை சரியாக அறியாததும் தவறான எண்ணங்களுக்கு யூதர்களை வழிநடத்தியதை ஆண்டவர் இயேசு சொன்னார்.

## வாசகர்களின் கவனத்திற்கு

அன்பான வாசகர்களே!
உங்கள் ஆண்டு சந்தா தொகையை
G-Pay மூலம் அனுப்பி
உங்கள் சந்தாவை
புதுப்பித்துக் கொள்ளவும்.
நன்றி!

ஆண்டு சந்தா : ரூ. 120/-
G-Pay No. 92 4421 4421

அல்லது, வங்கிக் கணக்கில் செலுத்த,

A/c Name : Kirubaiyulla Varthai
A/c No. : 57022317422
IFSC Code : SBIN0011068
Branch : SBI - Bye Pass Road Branch, Madurai.

**மத்தேயு 22:29** "இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக; நீங்கள் வேதவாக்கியங்களையும், தேவனுடைய வல்லமையையும் அறியாமல் தப்பான எண்ணங்கொள்ளுகிறீர்கள்." ஆகையால் நிறைய நேரம் பைபிளை படிக்க, தியானிக்க மற்றும் ஆராய்ச்சி செய்ய செலவிடுவோம்.

இறுதியாக, அன்பானவர்களே! 'இறைவன் எல்லாம் படைத்தான் மனிதர்க்காக, மனிதனை படைத்தான் தன்னை வணங்க' என தமிழ் பழமொழி ஒன்றை நாம் கேட்டிருக்கலாம். ஆம்! கர்த்தர் மனிதனுக்காக தான் எல்லாவற்றையும் படைத்தார் **(ஆதி 1).** ஆனால் மனிதனை தனக்காக படைத்தார் **(மல்கியா 2:15).** ஆகையால் நாம் நமது படைப்பின் நோக்கமறிந்து, கர்த்தரை மகிமைப்படுத்தும்படி, நம் சிந்தனை, செயல் மற்றும் வார்த்தைகளை சீராக்கி, நாம் வாழ்வினை கர்த்தருக்கு நேராக்குவோம். ஆசீர் பெறுவோம்!

அன்புடன்
**ஆசிரியர்**

# கர்த்தரை மகிமைப்படுத்திய மரியாள்..

சகோதரி : பேபி ராஜா



அன்பான சகோதரிகள் அனைவருக்கும், ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே எனது அன்பின் வாழ்த்துக்களை கூறிக்கொள்கின்றேன்.

மரியாள் கர்த்தரை துதிக்கின்ற இந்த நிகழ்ச்சி என்பது சகரியா, எலிசபெத் தம்பதிகளின் இல்லத்தில் நிகழ்ந்தது. கர்த்தருடைய தூதன் தன்னை சந்தித்து, ஆண்டவரின் பிறப்பினை பற்றி மரியாளிற்கு சொன்னார். அவர் மேலும், எலிசபெத் பெற்ற கிருபையையும் சொன்னார். இதனை அறிந்த மரியாள் தன் உறவினரான எலிசபெத்தை வாழ்த்தும்படி அவள் வீட்டிற்கு சென்றாள். மரியாளின் வாழ்த்துதலை கேட்ட எலிசபெத், பரிசுத்த ஆவியினால் நிறைந்து, மரியாளிற்கு மாத்திரமே தெரிந்த, ஆண்டவரின் பிறப்பை பற்றிய ரகசியத்தினை பேசினது. என் ஆண்டவருடைய தாயார் என அவள் மரியாளை அடையாளப்படுத்தியது, மரியாளை மெய்சிலிர்க்க வைத்திருக்க வேண்டும். மரியாளின் உள்ளம் முழுவதும் நன்றியால், அற்பமான தனக்கு அவர் அருளிய கிருபையை எண்ணி துதித்த துதிப்பாடல் இது. இந்த நிகழ்வில் கர்த்தரை துதிக்க மரியாளை தூண்டியவற்றை நாம் அறியும்போது, நம் மனதையும் கர்த்தரை துதிக்க நம்மை நாமே தூண்டிக்கொள்ள உதவியாயிருக்கும்

## கர்த்தர் யார் என்பதை அறிவதினால்

**லூக்கா 1:49–55** "வல்லமையுடையவர் மகிமையானவைகளை எனக்குச் செய்தார்; அவருடைய நாமம் பரிசுத்தமுள்ளது. அவருடைய இரக்கம் அவருக்குப் பயந்திருக்கிறவர்களுக்குத் தலைமுறை தலைமுறைக்குமுள்ளது. தம்முடைய புயத்தினாலே பராக்கிரமஞ் செய்தார்; இருதய சிந்தையில் அகந்தையுள்ளவர்களைச் சிதறடித்தார். பலவான்களை ஆசனங்களிலிருந்து தள்ளி, தாழ்மையானவர்களை உயர்த்தினார். பசியுள்ளவர்களை நன்மைகளினால் நிரப்பி, ஐசுவரியமுள்ளவர்களை வெறுமையாய் அனுப்பிவிட்டார். நம்முடைய பிதாக்களுக்கு அவர் சொன்னபடியே, ஆபிரகாமுக்கும் அவன் சந்ததிக்கும் என்றென்றைக்கும் இரக்கஞ் செய்ய நினைத்து, தம்முடைய தாசனாகிய இஸ்ரவேலை ஆதரித்தார் என்றாள்."

மரியாள் கர்த்தரை துதிக்க, முதலாவது அவள் கர்த்தர் யார் என்பதை அறிந்திருந்தாள். கர்த்தரை பற்றிய தெளிந்த அறிவை மரியாளிடம் நாம் காண முடிகின்றது. கர்த்தர் சர்வவல்லவர் எனவும், மகிமையானவற்றை செய்கின்றவர் எனவும், அவருடைய நாமம் பரிசுத்தமானது எனவும், பெருமையானவர்களை தாழ்த்தி தாழ்மையானவர்களை உயர்த்துகிறவர் எனவும் அறிந்திருந்தாள். மேலும், அவர் பசியுள்ளவர்களை நன்மையினால் நிரப்புகின்றவர் எனவும், இரக்கம் செய்கின்றவர் எனவும், தாம் சொன்னதை செய்கின்ற வாக்குமாறாதவர், தாம் சொன்னபடியே இஸ்ரவேலை ஆதரித்தார் எனவும் அறிந்திருந்தாள்.

கர்த்தர் சர்வவல்லவர், பரிசுத்தமானவர், உயர்த்துகின்றவர், நன்மையினால் நிரப்புகின்றவர், இரக்கமுள்ளவர் மற்றும் சொன்னவற்றை செய்கின்ற வாக்குமாறாதவர் என்ற அறிவையும், அதன்பொருட்டு மாபெரும் விசுவாசத்தினையும் மரியாள் கொண்டிருந்தாள். கர்த்தரை துதிக்க, முதலாவது அவர் யார் என அறிவது நமக்கு அவசியமானது. ஆகையால் அன்பான சகோதரிகளே, வேதாகமத்தினை படிக்க அதிகமான நேரம் செலவிடுவோம். இவ்வுலக பெண்களை போல, போனிலோ, தொலைகாட்சியிலோ அல்லது குடும்ப பொறுப்புகளிலோ மூழ்கிவிடாமல் வேதாகமத்தினை கிடைக்கும் நேரமெல்லாம் வாசிப்போம் அல்லது நேரத்தினை ஏற்படுத்தி வாசிப்போம்.

## அவர் நமக்கு செய்த நன்மைகளை உணர்வதினால்

**லூக்கா 1:46–48** "அப்பொழுது மரியாள்; என் ஆத்துமா கர்த்தரை மகிமைப்படுத்துகிறது. என் ஆவி என் இரட்சகராகிய தேவனில் களிகூறுகிறது. அவர் தம்முடைய அடிமையின் தாழ்மையை நோக்கிப் பார்த்தார்; இதோ, இதுமுதல் எல்லாச் சந்ததிகளும் என்னைப் பாக்கியவதி என்பார்கள்."

கர்த்தர் தனக்கு செய்ததை நினைத்து பார்த்ததினால், மரியாள் கர்த்தரை துதித்தாள். அடிமையான தன்னை அவர் ஆசீர்வதித்ததின் மேன்மையை உணர்ந்தாள். தனக்களிக்கப்பட்ட கிருபை எவ்வளவு மகிமையானது மற்றும் உன்னதமானது என்பதினையும் அவள் உணர்ந்தாள். கர்த்தர் நமக்கு செய்தவற்றை நாம் நினைக்கும் பட்சத்தில், நம் நாவு

நிச்சயம் அவரை துதிக்காமலிருக்காது. சுத்தமான 10 குஷ்டரோகளிகளில் ஒருவன் மாத்திரமே ஓடி வந்து, அவர் பாதத்தில் விழுந்து நன்றி சொல்லி, பிதாவை மகிமைப்படுத்தினான். மற்ற 9 பேரும் தங்களுக்கு கர்த்தர் செய்ததை உணரவில்லை. அல்லது உணர்ந்து அதனை ஒருபொருட்டாக எடுத்துக்கொள்வில்லையா என்பதும் தெரியவில்லை.

ஆமா பெரிய என்ன பண்ணிட்டாரு, இதெல்லாம் ஒரு விசயமா? என கர்த்தர் என்ன செய்தாலும் அதை பற்றி குறைகூறிக்கொண்டே முறுமுறுத்த அழிந்த இஸ்ரவேல் மக்களை போல தான், இந்த நாட்களிலும் அநேகர் இருக்கின்றனர். அவர்களால் கர்த்தரை துதிக்க சபைக்கூடுகைகளில் நேரப்பட வர முடியாது. செய்தி நடந்துக்கொண்டிருக்கும் போதோ, அல்லது கர்த்தரின் பந்தி மாத்திரம் போதும் என தொழுகையின் மற்ற பகுதியை புறக்கணிப்பவராகவோ இருக்கின்றனர். இது மிகவும் அபாயகரமான செயல் மற்றும் அசிங்கமான பாவமாகும். அன்பான சகோதரிகளே கர்த்தர் நமக்கு செய்தவற்றிற்காக அவரை துதிப்போம், சங்கீதக்காரனை போல நாள்தோறும், இடைவிடாமல் துதிப்போம். புல்லை தின்ற பிறகுதும், அதனை அசைப்போட்டுக்கொண்டிருக்கின்ற எருதினை போல, கர்த்தர் நமக்கு செய்த நன்மைகளை நம் மனதிலே எப்பொழுதும் அசைப்போட்டுக்கொண்டு, அவரை துதித்துக் கொண்டே இருப்போம். துதிகளின் மத்தியில் வாசம் செய்கின்ற கர்த்தர், நாம் துதிக்கின்ற நம் இல்லத்திலும், உள்ளத்திலும் வந்து, குறைவை நிறைவாக்கி ஆசீர்வதிப்பாராக.

## சிறுவர்க்கான கேள்விகள்

1. பவுல் அநேகருக்கு என்ன பிரசங்கித்தான்?
2. பவுலும் சீலாவும் கர்த்தரை எப்போது துதித்தார்கள்?
3. சங்கீதக்காரன் என அழைக்கப்பட்டவர் யார் ?
4. அன்னாள் கஷ்டம் வரும் போது என்ன செய்தாள்?
5. அன்னாள் மகிழ்ச்சி வரும் போது என்ன செய்தாள்?

## சிறுவர் பகுதி பதில் எழுதியவர்கள்

1. A. ஹானா ஜோதி – மதுரை
2. டேனியல் – மதுரை
3. அன்னாள் – மதுரை
4. S. லக்ஷிதா – கரூர்
5. S. கனிஸ்கா – கரூர்
6. M. ஜோனத்தான் – கரூர்

### பொதுவான செய்திகள்

## ஐங்குறுநூறு

- ஐங்குறுநூறு எட்டுத்தொகை என வழங்கும் தொகுப்பு நூல்களுள் ஒன்று. இதிலுள்ள பாடல்கள் கடைச்சங்க காலத்தைச் சேர்ந்தவை.
- அன்பின் ஐந்திணையான குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐந்து நிலம் சார்ந்த திணைகள் ஒவ்வொன்றிற்கும் நூறு பாடல்கள் வீதம் இந்நூலில் ஐந்நூறு அகத்திணைப் பாடல்கள் உள்ளன.

  அவை, ஆசிரியப்பாவில் அமைந்த 3 அடி சிற்றெல்லையும் 6 அடி பேரெல்லையும் கொண்டதாக விளங்குகிறது. இந்நூல் குறைந்த அடியெல்லை கொண்ட பாக்களால் அமைந்தமையால் ஐங்குறுநூறு எனப் பெயர் பெற்றது.
- இந்நூலுக்குக் கடவுள் வாழ்த்து பாடியவர் பாரம் பாடிய பெருந்தேவனார் ஆவார்.
- ஐங்குறுநூற்றில் அமைந்துள்ள ஒவ்வொரு திணையைச் சார்ந்த 100 பாடல்களையும் ஒவ்வொரு புலவர் இயற்றியுள்ளார். அவ்வகையில் இந்நூலில் அமைந்த 500 பாடல்களும் ஐந்து வெவ்வேறு புலவர்களால் இயற்றப்பட்டுள்ளன.
- மருதத் திணைப் பாடல்கள் (100) – ஓரம்போகியார்
- நெய்தல் திணைப் பாடல்கள் (100) – அம்மூவனார்
- குறிஞ்சித் திணைப் பாடல்கள் (100) – கபிலர்
- பாலை திணைப் பாடல்கள் (100) – ஓதலாந்தையார்
- முல்லைத் திணைப் பாடல்கள் (100) – பேயனார்

ஆகியோர் பாடியுள்ளனர். இந்நூலைத் தொகுத்தவர் "புலத்துறை முற்றிய கூடலூர் கிழார்" என்னும் புலவர். தொகுப்பித்தவர் "யானைகட் சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை" என்ற வேந்தன் ஆவார்.

# தொழுகையில் இசைக்கருவிகளைப் பயன்படுத்துவது

(கொலோசெயர் 3:16-17)

*சென்ற இதழின் தொடர்ச்சி...*

## முடிவுரை

B. 13 வசனங்கள் தொழுகையில் பாடுவது தொடர்பாக விவரித்து சொல்லப்பட்டிருக்கிறது. குறிப்பிடப்பட்டுள்ள ஒரே இசை வாய்ப்பாட்டு.

1. துக்கமான அல்லது சந்தோஷமான சூழ்நிலையில் இசைக்கப்படுவதைப் பற்றி 44 முறை புதிய ஏற்பாட்டில் குறிப்பிடப் பட்டிருக்கின்றது. ஆனால் வெளிப்படுத்தின விசேஷத்தில் தவிர தொழுகையோடு தொடர்பாக ஒரு இடத்திலும் இல்லை.

2. அப்படியாக நாம் தொழுகையில் இயேசுவின் நாமத்தில் பாடலாம் ஆனால் இயேசுவின் நாமத்தில் கருவிகளை இசைக்க முடியாது ஏனென்றால் இயேசு அதற்கு அதிகாரங் கொடுக்கவில்லை.

3. கிறிஸ்து பயன்படுத்தும்படி அதிகாரங்கொடுத்த கருவி இதயமே.

4. பிளாயிட் டெக்கர் அவர்களுக்கும் சகோதரர் வில்காக்ஸ் அவர்களுக்கும் இடையே நடந்த 5 நாள் இரவு விவாதத்தைப் பற்றி சொல்லுங்கள். டெக்கர் அவர்கள் கிறிஸ்தவ சபையின் பேச்சாளராக 30 நிமிடங்கள் தன் சொல்லாற்றலால் முதலாவது இசைக் கருவிகளை பயன்படுத்துவதற்கு ஆதரவாக பேசினார். அடுத்து வில்காக்ஸ் அவர்கள் எழுந்து கரும்பலகையில் ஒருபக்கம் பாடும்படி புதிய ஏற்பாட்டில் அதிகாரங் கொடுத்துள்ள வசனங்களையும் அடுத்த பக்கத்தில் ஒரு வட்டம் வரைந்து அதில் டெக்கர் அவர்கள் புதிய ஏற்பாட்டில் எந்த இடத்தில் இசைக்கருவிகளை பயன்படுத்த அதிகாரங் கொடுக்கப்பட்டுள்ளது என்பதை எழுதினால் விவாதம் முடிந்துவிடும் என்று எழுதினார். இரண்டே நிமிடங்கள் பேசிவிட்டு அமர்ந்தார். டெக்கர் எழுந்து வில்காக்ஸ் அவர்களை கேலி பேசிவிட்டு இசைக் கருவிகளுக்கு ஆதரவாக தனது வழக்கமான ஆதரவை அறிவித்தார். வில்காக்ஸ் மறுபடியும் 2 நிமிடங்கள் பேசிவிட்டு அமர்ந்தார். அடுத்த நாள் ஒரு மூப்பர் வந்து டெக்கரின் அலுவலகத்துக்கு வந்து ஏன் அவர் கரும்பலகையில் ஒரு வசனத்தை எழுதவில்லை என்று கேட்டார். அதற்கு டெக்கர் அந்த வசனம் எங்கிருக்கிறது என்று கேட்டார். அதற்கு டெக்கர் அந்த வசனம் எங்கிருக்கிறது என்று வந்த மூப்பர் சொன்னால் எழுதி விடுவேன் என்றார். "நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்" டெக்கர், சொன்னார், எனக்குத் தெரியாது ஆனால் இதுபோல் இன்னும் நான்கு இரவுகள் இருக்கின்றன. சற்று நேரத்திற்குப் பின்பு டெக்கர் வில்காக்ஸ் அவர்களிடம் சென்று தான் தப்பு செய்துவிட்டேன் என்று மன்னிப்பு கேட்டார். இன்றைக்கு இதுபோன்ற அறிக்கையை செய்வதற்கு வெகு சிலரே இருப்பர். மற்றவர்கள் இது போன்ற கருத்துக்கள் கலந்து பேச தகுதியுள்ளவைகள் என்று கூட நினைப்பதில்லை.

C. சிலர் நமக்கு சபைகூடும் கட்டிடம் அல்லது பாட்டு புத்தகம் ஆகியவற்றை வைத்துக்கொள்ள எவ்வளவு அதிகாரமுள்ளதோ, அவ்வளவு அதிகாரம் பியானோ வைத்துக் கொள்ளவும் இருக்கிறது என்கின்றனர். இவை இரண்டுமே வேதத்தில் குறிப்பிடப்படவில்லை.

1. தொழுகைக்காக நாம் கூடிவர வேண்டுமென்று கட்டளையிடப்பட்டுள்ளது. இதற்கு அவசியமாக ஒரு இடம் தேவைப்படுகிறது. (வாங்கியோ அல்லது வாடகைக்கு எடுத்ததோ) ஒரு மரத்தடியிலோ அல்லது ஒரு வீட்டிலோ.

2. பாட வேண்டுமென்று நாம் கட்டளையிடப் பட்டுள்ளோம். அப்படியென்றால் அதில் பாட்டு புத்தகங்கள் அவசியமாகிறது. அது நாம் பாட உதவுகிறது.

3. ஒரு கருவி என்பது பாட உதவும் ஒன்றல்ல மாறாக அது பாடலிலிருந்து முற்றிலும் மாறுபட்ட ஒரு இசையாகும்.

## முடிவுரை

1. யாரும் இசைக்கருவியை உபயோகிக்கலாம் என்று ஒருபோதும் ஏற்றுக்கொண்டதில்லை. ஏனென்றால் நீண்டகால ஆய்வுக்குப் பிறகு அது தேவனுடைய திட்டத்தின்படியானது என்று அவர் தீர்மானித்தார்.

2. அது அது அப்படியே ஏற்றுக் கொள்ளப் பட்டுள்ளது ஏனென்றால் மதரீதியாக நடைமுறையில் தேர்ந்தெடுப்பதற்கு அது சவுகரியமான ஒன்றாக இருக்கிறது. வேறு வார்த்தையில் சொல்வதென்றால், நாம் இதை விரும்புகிறோம் அல்லது மற்ற எல்லோரையும் போல இருக்க விரும்புகிறோம். ஆனால் மறுபடியும் இது மனிதனுடைய மாம்ச வாழ்க்கைக்கு பிடித்ததாகவே இருக்கிறது.

3. தனிமனிதனாக ஒருவேளை நாம் ஆதரிக்காவிட்டாலும், இசைக்கருவிகள் வாசிப்பதை நாம் சார்ந்துள்ள சபையில் இதை வாசித்தால் அதன் பயன்பாட்டுக்கு நீங்கள் ஆதரவளிக்கிறீர்கள்.

4. இதே கொள்கை வேறு அநேகத்துக்கும் பொருந்தும். நவீன கால மதநம்பிக்கை அதிகாரமளிக்கப்படாத அநேகத்தை சேர்த்துக் கொள்ளகின்றது. (தூபம் காட்டுவது சாம்பிராணி புகைப்பது) பக்தி, நடனம், மெழுகுவர்த்தி ஏற்றுதல், இறுதிச் சடங்குகள் மற்றும் பல.

5. கடவுள் சொன்னபடி அதிகாரமளித்தபடி செய்வதில் மட்டும் நீங்கள் திருப்தியடை கிறீர்களா?

## இயேசுவின் உயிர்த்தெழுதல்

**பாடம் 3**
**(கொரிந்தியர் 15:1-23)**

1. கிறிஸ்துவானவரின் சரீர உயிர்த்தெழுதலைப் ப்றறி வேதம் தெளிவாக போதிக்கிறது. இருப்பினும் அநேக மக்கள் அதை நம்பக்கூடாத நிலையில்லா விட்டாலும் நம்ப சிரமப்படுகின்றனர்.

2. ஒரு மூதாட்டி செயற்கைப் (அலங்காரத்துக்கான) பழங்களை விற்றுக் கொண்டிருந்தார். ஒரு நாள் ஒரு வாடிக்கையாளர் அந்த மூதாட்டி விற்கும் பழம் போதிய அளவு உண்மைத் தன்மையுடைய தாயில்லை என்று புகார் செய்தார். அவர் ஒரு ஆப்பிளைக் காண்பித்து இது நம்ப உண்மையான ஆப்பிள் என்று நம்ப முடியாத அளவு சிகப்பாகவும், உருண்டையாகவும், மிகப் பெரியதாகவும் இருக்கிறது என்றார். அந்த சமயத்தில் செயற்கைப் பழம் விற்கும் அந்த மூதாட்டி ஒரு ஆப்பிளை எடுத்து சாப்பிடத் தொடங்கினார். காலங்காலமாக இயேசுவின் உயிர்த்தெழுதல் பரிசோதிக்கப்பட்டு அநேக அதிகாரிகளால் தீர்க்கப்பட்டு எழுத்தாளர்களால் தொகுத்து எழுதப்பட்டதாக இருக்கிறது. அநேகருடைய முடிவு என்னவென்றால் இந்த நிகழ்வு நிரூபிக்க முடியாத அதே சமயம் நமக்கு மிகவும் நல்லதொரு நிகழ்வாகும்.


3. இதை நம்புகிறேன் என்று சொல்லும் மற்றவர்களுக்கும் அது நடந்ததா இல்லையா என்பதைப் பற்றிகூட கவலையில்லை. இந்த விதமான குருட்டு நம்பிக்கை வாழ்வின் மற்ற விஷயங்களிலும் ஏளனம் செய்யப்படுகின்றன.

4. பல வருடங்களுக்கு முன்பு இயேசுவானவரின் உயிர்தெழுதலைப் பற்றி “டைம்ஸ் மற்றும் நியூஸ்வீக் பத்திரிகைகளில் முக்கியச் செய்தி ஒன்று வெளியானது.

5. நியூஸ்வீக் என்ற பத்திரிக்கைக்கு 600க்கும் அதிகமான கடிதங்கள் இந்த கட்டுரையைப் பற்றி பலவிதமான அபிப்பிராயங்களைச் சொல்லி எழுதப்பட்டன. அதில் இரண்டு கடிதங்களை கவனியுங்கள். ஒன்று தன்னைத்தானே'' ''போற்றத்தக்கவர் என்று அழைத்துக் கொள்பவர்” உங்கள் செய்தி மிகவும் பிரமாதமாக அதை (உயிர்த்தெழுதலை) சொல்லியிருக்கிறது. வேதாகமம் முரண்பாடுகளும், கற்பனைக் கதைகளும் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளும் கேள்விக்குரிய சரித்திரமும் கொண்டது. நீங்கள் அதை ஒரு பிரத்தியேகமான நிலையிலிருந்து கேட்க முடியாது. ஆனால் இயேசு என்ற ஒரு மனிதருடைய சரீர உயிர்தெழுதலைக் குறித்து வேதாகமம் அசைக்க முடியாத திட நம்பிக்கையை வலியுறுத்துகிறது. எல்லாம் சொல்லப்பட்டு முடிந்த பின்பும் இந்த நம்பிக்கை எப்போதும் போல விசுவாசத்துக்குரிய ஒன்றாகவே இருக்கிறது. இது சங்கடத்தை உண்டு பண்ணுவதாயிருந்தாலும் அதை விடவும் சபையின் மகிழ்ச்சியாயிருக்கிறது.

(அடுத்த இதழில் தொடரும்...)

# கர்த்தரை துதித்த பவுல்



கடவுளின் செல்லங்களா ! எல்லாரும் எப்படியிருக்கிறீர்கள்? உங்கள் யாவரையும் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துகிறேன்.

கர்த்தருக்கு பிரியமானவர்களே! இப்பொழுது பவுல் என்னும் அண்ணன் தேவனை துதித்து பாடின பாடலின் மூலம் சில பாடங்களை கற்றுக்கொள்ளலாமா? பவுல் அண்ணன் இந்த பாடலை எந்த சூழ்நிலையில் பாடினார் தெரியுமா?

பவுல் இயேசுவை பற்றியும், பாவமன்னிப்பை பற்றியும் அநேகருக்கு பிரசங்கித்தான், அநேகர் இயேசுவை அறிய துடங்கினார்கள். இயேசுவை ஏற்றுக்கொள்ளாதவர்கள், பவுலை, குற்றப்படுத்தினார்கள். இவன் நமக்கு விரோதமாக பேசுகிறான். நம் நம்பிக்கைக்கு எதிராக பேசுகிறான் என்றார்கள். ஜனங்களும் கூட்டங்கூடி பவுலுக்கு விரோதமாக கூடினார்கள். அதிகாரிகள் அவனை அடிக்கவும், ஆடையை கிழித்துப்போடவும் சொல்லி அவர்களை அநேகம் அடி அடித்தார்கள். பிற்பாடு காவலில் வைத்து மாட்டு தொழுவத்தில் அவர்கள் கால்களை கட்டிபோட்டார்கள். எவ்வளவு வேதனை நிறைந்த சூழ்நிலைகள் பார்த்தீர்களா! இந்த நிலையிலும் கூட அவர்கள் தேவனை துதித்து அதுவும் நடுராத்திரி நேரம் பாடினார்கள். ஜெபம் பண்ணினார்கள் **(அப் 16:25)**, அதன் விளைவு என்ன தெரியுமா ? அவர்கள் வைக்கப்பட்ட சிறை கதவு உடைந்தது, இடம் அசைந்தது, சிறைச்சாலைக் காவலர்கள் தங்களை அழித்துக்கொள்ள நினைத்தார்கள். பவுல் அவர்களை நோக்கி வேண்டாம் உங்களை அழிக்க நினைக்காதீர்கள், நாங்கள் எல்லாரும் இங்குதான் இருக்கிறோம். பின்பு சிறை அதிகாரிக்கும் அவன் குடும்பத்திற்கும் இயேசுவைப் பற்றி சொல்லி இரட்சிப்புக்குள் நடத்தினார்கள். கடவுளுக்கு பிரியமான செல்லங்களா! உங்களுக்கும் உண்மையாய் இருப்பதினால், தாய் தகப்பனுக்கு கீழ்பவடிவதினால் இயேசுவை பற்றிச் சொல்வதினால் துன்பம் கஷ்டம் வரலாம். இந்த சூழ்நிலைகளில் பவுலைப் போல கடவுளை துதித்துப்பாடுவீர்களா உங்களையும் கடவுள் பெரிய காரியங்களுக்கு பயன்படுத்துவார்.

**மனப்பாட வசனம் : எபி 2:12** "உம்முடைய நாமத்தை என் சகோதரருக்கு அறிவித்து, சபை நடுவில் உம்மைத் துதித்துப் பாடுவேன் என்றும்;"

**– அன்பு ஏசுதாஸ்**




# சங்கீதக்காரன்

ஹாய் குட்டீஸ்! உயிர்த்தெழுந்த ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன்.

இஸ்ரவேல் என்ற நாட்டை தாவீது என்ற ராஜா ஆட்சி செய்து வந்தார். அவர் அப்பா பெயர் ஈசாய். தாவீது, ஈசாய்க்கு எட்டாவது பிள்ளை. தாவீது கர்த்தருக்கு பயந்து கீழ்ப்படிந்து நடந்தார். எந்த நேரமும் கர்த்தரை துதித்துக் கொண்டேயிருப்பார். இவர் ராஜாவாவதற்கு முன்பாக ஆடுகளை மேய்க்கின்ற வேலை செய்து கொண்டிருந்தார். அப்போதும் தேவனை துதித்து பாடிக் கொண்டேயிருப்பார்.

தன்னை புகழ்ந்து துதித்த, ஆட்டு மேய்ப்பானான தாவீதை, கர்த்தர் இஸ்ரவேல் மக்கள் எல்லாரும் புகழும் படியாக செய்தார். ஆம், ஒருமுறை பெலிஸ்தியர் இஸ்ரவேல் மக்களோடு யுத்தம் செய்ய வந்தனர். அவர்களில் கோலியாத் என்னும் இராட்சதன் வந்து இஸ்ரவேல் ராணுவத்தினையே



மிரட்டிக் கொண்டிருந்தான். அந்த சூழலில் கர்த்தர் தாவீதின் துணை நின்று, கோலியாத்தினை வெல்ல வைத்து, இஸ்ரவேல் மக்கள் அனைவரும் அவனை பாராட்டும்படி செய்தார்.

அது மாத்திரமல்ல, அவனை இஸ்ரவேல் மக்களை ஆளும் அரசனாக உயர்த்தினார். தாவீது ராஜாவான பிறகும் கர்த்தரை துதிப்பதை விடவில்லை. அதனை தொடர்ந்து செய்துகொண்டே இருந்தார். ஆடுகளை மேய்க்கும் போதும், சவுல் அரசன் தன்னை கொலை செய்ய வெறிகொண்டு சுற்றி அலைந்த போதும், தான் அரசனான போதும், தன் பிள்ளைகளால் ஏமாற்றப் பட்டு, நாட்டைவிட்டு துரத்தப்பட்ட போதும், மீண்டும் அரசனாக அரியணை ஏறிய போதும் என வாழ்வின் ஒவ்வொரு சூழலிலும் கர்த்தரை புகழ்ந்துக் கொண்டே இருந்தார்.

இந்த தாவீது ராஜா எழுதின பாடல்கள் தான் சங்கீத புத்தகத்தில் நிறைய நிறைந்து இருக்கின்றது. இதனால் இவர் சங்கீதக்காரன் என்று கூட அழைக்கப்படுகின்றார். இந்த தாவீதை கர்த்தர் தன்னுடைய இருதயத்திற்கு ஏற்றவன் என்று சொல்லி பாராட்டினார்.

பார்த்தீங்களா குட்டீஸ் ! நாமும் தாவீது ராஜாவை போல வாழ்வின் எல்லா சூழலிலும் கர்த்தரை துதிப்போம். தினமும் காலையும் மாலையும் துதிப்போம். தனியாக துதிப்போம். குடும்பமாக துதிப்போம் மற்றும் சபையாகவும் கூடி துதிப்போம். துதிக்கு பாத்திரராகிய கர்த்தர் நம்மை ஆசீர்வதித்து, எப்பொழுதும் அவரை துதிக்க உதவி செய்வாராக.

**மனப்பாட வசனம் : சங்கீதம் 34:1** “கர்த்தரை நான் எக்காலத்திலும் ஸ்தோத்திரிப்பேன்; அவர் துதி எப்போதும் என் வாயிலிருக்கும்.”

**– குயினி பிரதீப்**

# அன்னாளின் நன்றி துதிபாடல்

சிறுவர் பகுதி

அன்புள்ள மழலை செல்லங்களுக்கு, நமது ஆண்டவர் இயேசுவின் பெயரால் அக்காவின் அன்பின் வாழ்த்துக்கள். அண்ணா அக்கா எல்லாருக்கும் பள்ளிகூடம் திறந்ததை போல, உங்களுக்கும் சீக்கிரமாக பள்ளிகூடங்கள் திறக்கவும். நீங்கள் பள்ளிக்கு சென்று நன்றாக படிக்கும்படியான சூழல் உண்டாகவும் நாங்கள் ஜெபிக்கின்றோம்.

பைபிளில் 1 சாமுவேல் புத்தகம் 2ம் அதிகாரத்தில் அன்னாள் என்ற அக்கா, கர்த்தரை புகழ்ந்து ஒரு நன்றியாடல் பாடினார்கள். யார் இந்த அன்னாள்?ஏன் இந்த பாடலை பாடினார்கள்?

எப்பிராயீம் மலை தேசத்தில் உள்ள ஒரு பட்டணத்தில் வாழ்ந்த, எல்க்கான என்பவரின் மனைவி தான் இந்த அன்னாள். அவளுக்கு குழந்தை இல்லாததினால் மிகவும் அவமானப்படுத்தப்பட்டாள். அந்த நேரத்தில் எல்லாம் அவள் தேவாலயம் சென்று அழுது ஜெபிப்பாள். அப்படி ஒரு முறை அவமானம் செய்யப்பட்ட போது, அன்னாள், கர்த்தாவே நீர் எனக்கு ஒரு பிள்ளை தந்து என் அவமானத்தினை நீக்கிவிடும், அப்படி நீர் தருகின்ற பிள்ளையை உமக்கே தருவேன் என பொருத்தனை செய்து வேண்டிக் கொண்டிருந்தாள்.

கர்த்தர் அன்னாளிற்கு மிகுந்த துக்கத்தினாலே வார்த்தை வராமல், முனங்கி கொண்டிருந்தாள். அவளது துக்கத்தினை அறிந்த ஆசாரியானாகிய ஏலி சமாதானத்துடனே போ, நீ இஸ்ரவேலின் தேவனிடத்தில் கேட்ட விண்ணப்பத்தின்படியே



உனக்கு பதில் தருவாராக என நம்பிக்கை ஊட்டி, ஆறுதல் சொல்லி அனுப்பினார்.

அன்னாளின் விண்ணப்பத்தினை கேட்டு, அவளுக்கு அழகான ஒரு ஆண் குழந்தை கொடுத்தார். அந்த குழந்தைக்கு சாமுவேல் என்று பேரிட்டார்கள். அதற்கு "கர்த்தரிடத்தில் கேட்டேன்" என்று பொருள். அந்த சாமுவேல் தான் பிற்காலத்தில் மிகப்பெரிய தீர்க்கத் தரிசியாகவும், நேர்மையான நீதிபதியாகவும் இருந்து, இஸ்ரவேல் மக்களை வழிநடத்தினார். கர்த்தர் தனக்கு தந்த பிள்ளையை, அன்னாள் மீண்டும் கர்த்தருக்கு வேலை செய்யும்படி தேவாலயத்தில் வந்து ஏலியிடம் ஒப்படைத்த போது, நன்றி பெருக்கினால் ஒரு துதிபாடலை பாடினாள். தான் எங்கு நின்று அழுதாலோ, அங்கே நின்று கர்த்தரை துதித்து புகழ்ந்தாள்.

மழலை செல்லங்களே, நமக்கு என்ன வந்தாலும் நமது பிரச்சனைகளை நமது பரலோக பிதாவிடம் சொல்வோம். அவர் தன்னுடைய சித்தத்தின்படி அதை நடத்துவார். அப்பொழுது நமக்கு அது நன்மையாகவும், மகிழ்ச்சியாகவும் இருக்கும். அவள் அழுத இடத்திலே, ஆண்டவர் அவளை மகிழ்ச்சியாக துதிக்க வைத்தார். நாமும் அன்னாளை போல, கர்த்தர் நமக்கு செய்த நன்மைகளை நினைத்து அவரை புகழ்ந்து துதிப்போம்.

**மனப்பாட வசனம் : யாக்கோபு 5:13** "உங்களில் ஒருவன் துன்பப்பட்டால் ஜெபம் பண்ணக்கடவன்; ஒருவன் மகிழ்ச்சியாயிருந்தால் சங்கீதம் பாடக்கடவன்."

**– பிரியா ஆண்டனி**


## Gospel Through Media by World Evangelism Team

**Philemon Rajah & Kingsly in Tamil on Tamilan TV :** Every Sunday 7.00 - 7.15 a.m (TAMILNADU Contact Mobile : *92 4421 4421 & 92 4431 4431*) ***Nambikai TV :*** *Every Sunday 3.30 p.m.* ***Salvation TV :*** *Every Sunday 2.00 p.m.*

**Rajnayagam & Benny Martin in Tamil on Tamilan TV :** Every Monday 7.00 - 7.15 a.m., Every Thursday 9.30 - 10.00 a.m. and Every Saturday 7.15 - 7.30 a.m. - Contact : 98427 30382

**Arjunan in Tamil on Nambikai TV & Radio :** TV : Every Monday & Saturday 7.30 - 7.45 p.m. Radio : Every Saturday 5.30 - 5.45 p.m. on 25 and 45 meter band of Sri Lanka Radio. (TAMILNADU Contact Mobile : 94435 58041)

**Joshua & Ricky Gootam in Telugu on Subhavartha, Aradharana TV :** Every Sunday 6.00 p.m. and Saturday 8.00 a.m. **Rakshana T.V :** Every Wednesday 6.30 p.m. and Thursday 2.30 a.m. (ANDRAPRADESH Contact Phone : 088423 63722)

**P.R. Swamy & Douglas in Tamil on Radio :** Every Sunday to Wednesday at 5.30 - 5.45 p.m. on 25 and 45 meter band of Sri Lanka Radio. (KARNATAKA Contact Mobile : 098440 70763)

**P.K. Varghese in Malayalam on JaiHind TV :** Every Saturday 6.00 - 6.30 a.m. on Jai Hind Channel. (KERALA Contact Mobile : 94470 35465)

**Sunny, Francis & Vinay David in Hindi on Shubh Sandesh TV :** Every Tuesday 7.00 - 7.30 on Shubh Sandesh Hindi Channel.

## செப்டம்பர் மாத கேள்விகள்

1. சுவாசமுள்ள யாவும் என்ன செய்ய வேண்டும்?
2. தாவீது கர்த்தரை எந்த காலத்தில் தோத்தரிப்பதாக சொல்கின்றார்?
3. கேட்கிறவர்களுக்கு பிரோஜனமுண்டாகும்படி எதனை பேச வேண்டும்?
4. ஒரே வாயிலிருந்து எவைகள் வரக்கூடாது என யாக்கோபு சொல்கின்றார்?
5. வார்த்தையினாலாவது, கிரியையினாலாவது எதை செய்தாலும், அதை எப்படி செய்ய வேண்டும்?
6. நன்றியறியாதவர்களுக்கும், துரோகிகளுக்கும் நன்மை செய்கிறவர் யார்?
7. நன்மையை யோசிக்கிறவர்களுக்கு என்ன உண்டு?
8. "என் ஆத்துமா கர்த்தரை மகிமைப்படுத்துகிறது, என் ஆவி என் இரட்சகராகிய தேவனில் களிகூறுகிறது" என்றது யார்?
9. யாருக்கு மகிமையும் கனமும் சமாதானமும் உண்டாகும்?
10. யாருடைய சிந்தை நமக்குள் இருக்க வேண்டும்?

**பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் : 5-10-2021**

அனுப்ப வேண்டிய முகவரி : **சகோதரி பேபி ராஜா**
45C/1, சர்ச் லேன், காரனேசன் தெரு,
அரசரடி, மதுரை – 625 016
செல் : 92 4421 4421, 92 4431 4431

### சென்ற இதழ் பதில்கள்

| | |
|---|---|
| 1. யோசுவா 24:15 | 6. கலா 6:9 |
| 2. எபி 11:9 | 7. மல்கியா 2:14 |
| 3. 2 பேதுரு 2:5 | 8. 1 பேதுரு 3:5 |
| 4. மத்தேயு 5:44 | 9. 1 சாமு 9:7 |
| 5. எபி 11:26 | 10. எபி 11:20 |

### சென்ற இதழ் கேள்விகளுக்கு பதில் எழுதியவர்கள்


1. C. வைலட் கிறிஸ்டிபாய் – தளவாய்புரம்
2. Mrs. M. ஜெனி – கரூர்
3. G. பீற்றர் பால்ராஜ் – ஆறுமுகநேரி
4. Mrs. ஹெப்சிபா தாமஸ் – படப்பை
5. Mrs. ஹெலன் திலக் – மதுரை
6. S. அசோக்குமார் பிரின்ஸ் – தூத்துக்குடி
7. Mrs. ஜெபசீலி ஜெயக்கொடி – திருச்சி
8. Mrs. ஜெயமணி ராஜம்மாள் – கடலூர்
9. A.G. சாமுவேல் – தூத்துக்குடி
10. Mrs. தெல்மா ஸ்டான்லி – மதுரை
11. Mrs. பிரேமலதா சுந்தர்பாபு – செங்கல்பட்டு
12. Mrs. சாந்தி வில்லியம் – புதுக்கோட்டை
13. Mrs. சாந்தி ஜோயல் – திருச்சி
14. Mrs. காந்தா மனோகரன் – திருச்சி
15. J. சுந்தரபாய் வில்லியம் – சேலம்
16. Mrs. R.P. டேவிட் – திருச்சி
17. Mrs. பெரில் பாஸ்கர் – படப்பை
18. Mrs. ராணி சாந்தகுமார் – மதுரை
19. S. பாக்கிய ராஜம் – மதுரை
20. Mrs. அன்னதாய் ஆல்பர்ட் – தூத்துக்குடி
21. Mrs. மேரி ராஜ் – மதுரை
22. Mrs. லீலா ஜோசப் – கோவை
23. S. நிர்மலா – நெல்லை
24. B. ஜாய்ஸ் ஜோசுவா – வெள்ளறம்
25. J. விஜய் – மதுரை
26. G. ஏஞ்சலம்மாள் – மதுரை
27. R. ஞானசிரோன்மணி – மதுரை
28. Dr. இவாஞ்சலின் ஜோன்ஸ் – சேலம்
29. Mrs. சமாதானம் பீட்டர் – விருதுநகர்
30. Mrs. A. இமல்டா சுந்தர்சிங் – ஈரோடு
31. J. ஜான்சி – ஆனைமலை
32. Mrs. D. குளோரி திலகவதி – சென்னை
33. P. ஜெயராஜ் செல்வி – நாமக்கல்
34. M.S. ஜேம்ஸ் – திண்டுக்கல்
35. A. ஆனந்த கதிரோன் – சென்னை
36. R. சரோஜா – தென்கலம்
37. Mrs. செல்வமணி ஜேம்ஸ் – சேலம்
38. Mrs. D. மீனாள் தெய்வசிகாமணி – மூலனூர்
39. D. வர்ஷினி – மூலனூர்
40. P. பரமேஸ்வரி – மூலனூர்
41. D. விக்னேஷ் – மூலனூர்
42. M.S. ஜேம்ஸ் – திண்டுக்கல்
43. Mrs. ஜோதிமணி அப்பாதுரை – மதுரை
44. Mrs. A. ரோஸ்மேரி – சென்னை
45. I.G. ரோஸ்லின் – நெல்லை
46. Mrs. டேவிட் ஜெயசந்திரன் – மதுரை
47. I.D. தேவதாசன் – நெல்லை
48. D.S. ஜெபநேசன் – திண்டுக்கல்
49. S.G. சேகர் – வேலூர்

Place of Publication : Arasaradi, Madurai
Printed & Published by P.C. PHILEMON RAJAH
Printed at Classic Printers & Binders Madurai-2 ✆ 94421 23819
Registered News Paper No. : TNTAM/2011/42166
Postal Registration No. : TN/MA/67/2021 - 2023
Date of Publication : 8th September 2021
Posted at Arasaradi HPO on 10th 11th September 2021


## கிருபையுள்ள வார்த்தை வெளியிட்டுள்ள சிறப்பு புத்தகங்கள்








அன்பார்ந்த வாசகர்களே! இந்த அனைத்து புத்தகங்களையும் உங்கள் ஆத்மீக வளர்ச்சிக்கு பயன்படுத்திக்கொள்ளும்படி வேண்டுகிறோம். ரூபாய் 100/-மட்டும் அனுப்பி இப்புத்தக தொகுப்பை பெற்றுக்கொள்ளுங்கள்!

## தபால் வழி பைபிள் பாடங்கள்






## கைபிரதிகள்









உங்கள் சுவிசேஷ ஊழியத்திற்கு கைபிரதிகள் பல்வேறு தலைப்புகளில் பாதி விலையில் கிடைக்கும். விபரங்களுக்கு : 92 4421 4421, 92 4431 4431


## BIBLE STUDY BOOKS IN ENGLISH











AVAILABLE FOR SPECIAL PRICE!


If undelivered please return to :

EDITOR
KIRUBAIYULLA VAARTHAI

45 C/1, Church Lane,
Coronation Street, Arasaradi,
Madurai - 625 016. India
E-mail : obey2jesus@gmail.com
Cell : 92 4421 4421, 92 4431 4431

To

Visit www.graciousword.org to read kv magazine online
follow us in facebook : NT Gospel Restorers